


தென்காசி மாவட்டம் தென்காசி சிந்தாமணியில் வசித்து வரும் கழக மூத்த முன்னோடி ஈஸ்வரன் மறைந்த வள்ளியம்மாள் ஆகியோரின் மகனும்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண்ணனும் தென்காசி 31வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான ஈ.பாலமுருகன் அவர்கள் (வயது 43) (03.10.2026 – சனிக்கிழமை) அன்று இயற்கையை எய்தினார்.அன்னாரது இல்லத்திற்கு கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே. என்.நேரு,முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் சென்று மறைந்த ஈ.பாலமுருகன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ.தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம். எல்.ஏ.சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன்,மணிமாறன்,துரை. சந்திரசேகர்,நகர செயலாளர் சாதிர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி,கீழஈரால் பகுதியில் நடைபெறும் சாலைப் பணியையும் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நடைபெறும் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணியையும் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர்,கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பார்வையிட்டார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீத கண்ணன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இம்மானுவேல், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயமுத்து, மாவட்ட பிரதிநிதி சக்திவேல் கனி, உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

உதயசூரியன் சின்னத்திற்கு பதில் த.வெ.க. சின்னத்திற்கு வாக்களிக்கச் சொன்ன அதிகாரி!

அலுவலர் மீது நடவடிக்கை கோரி தி.மு.க.வினர் வலியுறுத்தல்! கொழிஞ்சிவாடி வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு நிறுத்தம்!

தாராபுரம், அக்.7-

தாராபுரம் தொகுதியில் மூதாட்டிக்கு உதவு வதாகக் கூறி, அவரது வாக்கினை த.வெ.க. சின்னத்திற்கு செலுத்திய தேர்தல் அதிகாரியின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தைக் கண்டித்து தி.மு.க.வினர், வாக்கு வாதத்தில் ஈடுபட்டதோடு, நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்துள்ளனர்.

தாராபுரம் தொகுதியில் உதயசூரியன் சின்னம், பட்டன் எந்த இடத்தில் இருக்கிறது என கேட்ட மூதாட்டியை ஏமாற்றிய தேர்தல் அலுவலர், த.வெ.க. சின்னத்திற்கு வாக்களித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாராபுரத்தை அடுத்த கொழிஞ்சிவாடி வாக்குச் சாவடிக்கு வந்த 75 வயதான ஜெய்தீன் பிபீ என்ற மூதாட்டி ஒருவர் உதயசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும் அது எந்த பட்டன் என்று கேட்டுள்ளார். அங்கு பணியில் இருந்த தேர்தல் அலுவலர், இரண்டாம் நம்பர் பட்டன் என த.வெ.க. சின்னத்தை காண்பித்து, வாக்களிக்க வைத் துள்ளார். இதனை அறிந்த தாராபுரம் நகர தி.மு.க. செயலாளர் முருகானந்தம் உள்ளிட்ட தி.மு.க.வினர் அங்கு சென்று தேர்தல் அதிகாரி மீது நடவடிக்கை



எடுக்க கோரி வலியுறுத்தினர். இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க. வழக்கறிஞர் செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் மனு அளித்தனர்.

வள்ளலாரை போற்றுவோம்!

எது வள்ளலார் பிறந்த நாள்
மூடநம்பிக்கைகள் தகர்ந்த நாள்

வேத இதிகாச சதிகிடங்கை
அன்றே அடையாளம் காட்டிய
வள்ளல் பெருமான் பிறந்தநாள் !

ஆறாம் திருமுறை அணையா தீ!
மதவாத கும்பலை சுட்டெரிக்கும் தீ!

கடவுள் பெயரால் காசு பிடுங்கும்
கயவர்களை அம்பலப்படுத்தும் நெறிமறை!

தமிழர் வாழ்வியலுக்கான அருள் முறை!
ஒரு புதுமை முறை! பொதுமை முறை !

என்ன சொல்கிறார் வள்ளலார் !

"மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது"
. (ஆறாம் திருமுறை 4503)

குறித்த வேதாகமக்கூச்சலும் அடங்கிற்று
குதித்த மனமுருட்டுக்குரங்கு முடங்கிற்று
(ஆறாம் திருமுறை 4504)

எத்தகைய தொலை நோக்கு!

எத்தனை முரட்டு குரங்குகள்
இன்றும் வாலாட்டுகின்றன!

வர்ணாச் சிரமம் வேண்டுமாம்
சங்கி நரிகள் ஊளையிடுகின்றன!

எங்கு நோக்கினும் இழிவான
மலிவான மதப் புரட்டுகள்
கோயில் உண்டி திருட்டுக்கள்!



அன்றே எச்சரித்தது வள்ளலார் குரல்
இன்றும் மானுடத்தை மாய்க்கத் துடிக்கும்
மதவெறிக்கு எதிரான போர்க்குரல்!

வள்ளலாரை போற்றுவோம்!
மதவெறி ஆட்சியின்
வாக்கு திருடர்களை இனம் காண்போம்!

"கருணை இல்லா ஆட்சி கடிகி ஒழிக"
என்ற வள்ளலாரின் முழக்கத்தை
ஓங்கி ஒலிப்போம்.

பேராசிரியர்
மு.நாகநாதன்



ரீல்ஸ் மூலம் ஆட்சிக்கு வந்தவர்களுக்கு

தற்போது 'ரீல்ஸ்' அறுந்துவிட்டதாக பொதுமக்கள் கருத்து!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக்.7-

'தினகரன்' நாளேட்டில் தேர்தல் பயம் என்ற தலைப்பில் வெளியான தலையங்கம் வருமாறு:-

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு பின்னர், அதிமுக எம்எல்ஏக்கள் மரக தம் குமரவேல் (மதுராந்த கம்), சத்தியபாமா (தாராபு ரம்) உள்பட 6 பேர் தங்கள் பதவியை ராஜி னாமா செய் துவிட்டு தவெக வில் ஐக்கிய மானார்கள். திருச்சி கிழக்கு, கரூர், பெருந்துறை, விராலி மலை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளின் வெற்றியை எதிர்த்து தொட ரப்பட்ட வழக்கை விசா ரித்த சென்னை ஐகோர்ட், இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்து வதற்கு தடை உத்தரவு பிறப்பித்தது.

இதனால் இந்த 5 தொகு திகளை தவிர்த்து, மதுராந்த கம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் நடக்கிறது.

கடந்த சட்டமன்ற தேர் தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 2 பேரும் தற்போது தவெக வேட்பாளராக களம் இறங்கி உள்ளனர். மதுராந்தகம் தொகுதியில் 27 வேட்பாளர்களும், தாரா புரத்தில் 22 வேட்பாளர்க ளும் போட்டியிடுகின்றனர். இந்த 2 தொகுதியிலும் 5 முனை போட்டி நிலவுகிறது. மதுராந்தகம் தொகுதியில் 285 வாக்குச்சாவடி மையங் களும், தாராபுரம் தொகுதி யில் 320 வாக்குச் சாவடி மையங்களும் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மையங்


தினகரன்
அக்டோபர் 6, 2026 செவ்வாய்க்கிழமை
தேர்தல் பயம்
தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு பின்னர், அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்) உள்பட 6 பேர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் ஐக்கியமானார்கள். திருச்சி கிழக்கு, கரூர், பெருந்துறை, விராலிமலை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளின் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட், இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கு தடை உத்தரவு பிறப்பித்தது. இதனால் இந்த 5 தொகுதிகளை தவிர்த்து, மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் இன்று இடைத்தேர்தல் நடக்கிறது. கடந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 2 பேரும் தற்போது தவெக வேட்பாளராக களம் இறங்கி உள்ளனர். மதுராந்தகம் தொகுதியில் 27 வேட்பாளர்களும், தாராபுரத்தில் 22 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இந்த 2 தொகுதியிலும் 5 முனை போட்டி நிலவுகிறது. மதுராந்தகம் தொகுதியில் 285 வாக்குச்சாவடி மையங்களும், தாராபுரம் தொகுதி

களில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கு கிறது.

தமிழக அரசியல் வர லாற்றில் ஆட்சிக்கு வந்த 4 மாதத்தில் நடக்கும் இடைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பு அதிகமாக இருப் பது இந்த முறைதான். தமி ழக மக்களை முட்டாளாக நினைத்து முதல்வர் விஜய் முகத்தை காண்பித்தால் வெற்றி பெற்று விடலாம் என நினைத்த தவெகவின ருக்கு சம்மட்டி அடி விழுந் துள்ளது. பிரசாரம் செல் லும் இடங்களில் ஆளுங் கட்சி வேட்பாளர்களுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள் ளது. உடனே போலீசார் பாது காப்புடன் பிரசாரம் மேற்கொண்டனர். ரீல்ஸ் மூலம் ஆட்சிக்கு வந்த தவெ கவுக்கு இடைத்தேர்தல் கடும் நெருக்கடியை ஏற்ப டுத்தியுள்ளது. பிரசாரத்தில் நான்கு மாத ஆட்சியின் சாதனைகளை கூறி வாக்கு சேகரிக்காமல் திணறினர்.

தூய சக்தி என பரப்புரை செய்த ஆட்சியில், அரசு வழக்கறிஞர்கள் நிய மனத் துக்கு லஞ்சம், பணிகள் முடிவடைந்த பிறகு டெண் டர் அறிவிப்பு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு மூட்டைக்கு ரூ.70 வரை வசூலிப்பு, செங்கல் பட்டு ஒப்பந்ததாரரிடம் லஞ்சம் வாங்கிய தவெக நிர் வாகி என தினமும் ஊழல் கள் வெளிவந்து கொண்டி ருக்கிறது. இந்த ஆட்சியே மர்மமாக நடக்கிறது. அரசா ணைகள் வெளியிடாமல் அரசு நியமனங்கள நடக்கி றது. தவெக ஆட்சிக்கு வந்த பிறகு மின்வெட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை அதி கரித்துள்ளது. தினமும் கொலை, கொள்ளை அரங் கேறி வருகின்றன.

அரிசி, சர்க்கரை, காய் கறி என எல்லா விலையும் ஏறிவிட்டது. முதியோர், விதவை மற்றும் மாற்றத்திற னாளிகள் உதவித்தொகை கள் சரிவர போடவில்லை. 125 நாள் வேலை திட்டத்துக் கான ஊதியமும் பயனாளி களுக்கு கிடைக்கவில்லை. இதுபோன்று பல்வேறு பிரச்னைகளால் பணப்புழக் கமும் அறவே இல்லை. இப் பிரச்னைகளால் பொது மக் கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். இது முதல் வர் விஜய் பிரசாரத்திலும் எதிரொலித்தது. இரண்டு தொகுதியிலும் நடந்த விஜய் பிரசாரத்தில் பொது மக்கள் கலந்து கொள்ள வில்லை.

டீக்கடையில் விஜய் டீ குடித்ததும், வயலில் இறங்கி டிராக்டர் ஓட்டியதும், முருங்கைக்காய் பறித்ததும் தான் காட்சியானது. 5 நிமி டம் பேசினால் மக்கள் வாக் களித்து விடுவார்கள் எனக் கூறிய தவெகவினருக்கு மரண பயத்தை காட்டியுள் ளது இந்த இடைத்தேர்தல். இடைத்தேர்தல் ஆளும் அர சுக்கு எதிராக அமைந்தால் நிர்வாகத்திலும் மாற்றம் ஏற் படும். ரீல்ஸ் மூலம் ஆட் சிக்கு வந்தவர்களுக்கு தற் போது ரீல்ஸ் அறுந்து விட்டதாக அரசியல் நோக் கர்களும், பொதுமக்களும் கருதுகின்றனர்.

இவ்வாறு அதில் குறிப்பி டப்பட்டுள்ளது.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! சுதா தீனதயாளன் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் முப்பெரும் விழா!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி – எம்.எம்.அப்துல்லா சிறப்புரை!

சென்னை, அக்.7- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் மேற்கு பகுதி யில் முப்பெரும் விழா சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன் றத்தில் இன்று (07-10-2026 புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர் சுதா தீனதயாளன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட் ஆசாத், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், புனிதவதி எத்தி ராஜன், டாக்டர். ஏ.பி.பூர் ணிமா, சரிதா மகேஷ்கு மார், சாவித்திரி வீரராக வன், டாக்டர். ஜி.சாந்தகு மாரி, எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, பா.ஜெக தீஷ், நா.ரஞ்சித் விஜயாலயன், பி.விஜய கு மார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், வெ.பரிம ளம் ஆகியோர் முன்னி லையில் நடைபெறுகிறது.

மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா.முத் துக்குமார், ந.சுந்தரம், எஸ். சந்தியாகு, வி.சந்தான லட் சுமி, சி.ப.ஜெயராமன், டி.சதீஷ்குமார், வே.பா.பிர பாகரன், ஆ.நா.பார்த்தி பன், கே.கவியரசு, எல்.சத் யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ் லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிர வன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி, பா.அண் ணாதுரை ஆகியோர் வர வேற்கின்றனர்.

இந்த முப்பெரும் விழா வில் கழகத துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம். பி, கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப் துல்லா ஆகியோர் உரை யாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், தயா நிதி மாறன் எம்.பி., டாக் டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றி அழகன், ப.ரங்கநா தன், கே.எஸ்.ரவிச்சந்தி ரன், தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், பி. கே.மூர்த்தி, எம்.விஜயகு மார், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்தன், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவ கர், புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர் கள் கூ.பீ.ஜெயின், வே. வாசு, ஐசிஎப்.வ.முரளித ரன், எ.நாகராஜன், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, சொ. வேலு, வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன் னீர்செல்வம், டி.வி.செம் மொழி, சாவித்திரி வீரராக வன், கோ.மணி, பி.உதய சங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண் டன், அ.நிர்மலா தேவி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வான வில் விஜய், ஜெ.பாலமுரு கன், ஜி.ஜே. பிரபு, கே. வினோத், எஸ்.தனசேகர், எல்பிஎஃப்.மோகன், ஜி. தாமோதரன், நா.துலுக்கா னம், கு.கிருஷ்ண மூர்த்தி, ஆர்.எஸ்.சித்திக், இரா.வீர மணி, ம.அசோக் குமார், எம்.பெரோஸ்கான், கா. ராஜா முகமது மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர் கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

இவ்விழாவில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற் றும் மகளிர் தொண்டர் அணி



தாம்பரம் மாநகரப் பிரதிநிதி அ.லோகேஸ்குமாரின் மகன் ஏ.எல்.ரிஷிநிதி அவர்கள் "SGFI Under – 14 தமிழ்நாடு கால்பந்து அணியில் இடம் பிடித்ததற்கான சான்றிதழை, தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜாவிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் கே.ஞானவேல் ராஜா, இ.குபேந்திரன், எஸ்.சாய் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.